1970 மார்ச் 9]

இந்தியாவிலேயே எல்லா மாநிலங்களையும்விட மலேரியா ஒழிப்பில் தமிழகம்தான் முன்னணியில் இருக்கிறது, இந்தத் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது என்ற அத்தகைய குறிப்பு வந்திருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன் : தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உடுப்புகள் வழங்கப்படுவதில்லை. அப்படி உடுப்புகள் வழங்கப்படாதபொழுது, சம்பளம் பெறும்பொழுது உடுப்புகளைப்போட்டுக்கொண்டு சம்பளம் வாங்க வேண்டுமென்று நிர்பந்திக்கப்படுகிறது அதிகாரிகளால். அது சரியா? அந்த நிபந்தனைகள் கூடாது என்று அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட முறையீடுகள் வந்தன. அதுபற்றிப் பரிசீலிக்கும்படி நான் துறையினரிடம் கூறியிருக்கிறேன். பரிசீலிக்கப்பட்ட பிறகு அந்த நிலைமைகள் பற்றி ஆராயப்படும்.

வேலை அடிப்படையில் கல்வித் திட்டம்.

* 275 வினா **திரு. எஸ். அக்னிராஜு :** மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலை அடிப்படையில் கல்வி போதிக்க திட்டம் ஏதாவது தமிழ்நாடு அரசு தயார் செய்து கொண்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரமென்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 235, 236, 276, 277, 278, 279 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Stock of broken wheat in Government Godowns

* 280. Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(a) whether large stock of broken wheat has been piled up in Government Godowns in this State; and

(b) if so, the reasons thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) 3. 11. 1969 அன்றிருந்த நிலவரப்படி சென்னை மாநகர மண்டலக் கிடங்குகளில் 11 டன் அளவே கோதுமை நொய் இருந்தது. அந்த இருப்பு முழுவதும் தற்போது அனுப்பப்பட்டுவிட்டது.

Central Semen Banks.

* 281. Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether there is any proposal to establish Central Semen Banks, for frozen semen of high yielding breeds of cattle?